அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்.

காஞ்சிபுரம் மாவட்டம். 631 552

# 12 - ஆம் வகுப்பு

# கணக்குப்பதிவியல்

( 2018 - 2019)

## முக்கிய கருத்தியல் வினாக்கள்


**B. BALAJI,**
P.G. ASSISTANT INCOMMERCE,
GOVT. HR. SEC. SCHOOL,
PARANTHUR,
KANCHEEPURAM DISTRICT

## பாடம் 1 - இறுதிக் கணக்குகள் - சரிக்கட்டுதல்கள்

1. **கொடுபட வேண்டிய செலவு என்றால் என்ன** ?
   - இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் கணக்காண்டிற்கு உரிய செலவினங்கள், அந்த கணக்காண்டில் செலுத்தப்படாமலிருந்தால் அவை கொடுபட வேண்டிய செலவுகள் எனப்படும்.

2. **முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் என்றால் என்ன** ?
   - செலவுகள் முன்கூட்டிச் செலுத்தப்பட்டிருப்பின், அவை முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் எனப்படும்.
   - குறிப்பிட்ட செலவிலிருந்து கழிக்கப்பட்டு இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கத்திலும்,இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

3. **கூடியுள்ள வருமானம் என்றால் என்ன** ?
   - ஈட்டிய வருமானம் உரிய கணக்காண்டில் பெறப்படாமலிருந்தால், அவை கூடியுள்ள வருமானம் அல்லது பெறவேண்டிய வருமானம் எனப்படும்.

4. **முன்கூட்டிப் பெற்ற வருமானம் என்றால் என்ன** ?
   - குறிப்பிட்ட கணக்காண்டில் பெற்ற வருமானம் எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய பணி சார்ந்ததாக இருப்பின் அது முன்கூட்டிப் பெற்ற வருமானம் எனப்படும்.

5. **வாராக் கடன் என்றால் என்ன** ?
   - திரும்பப் பெற இயலாத கடன் வாராக் கடன் எனப்படும்.
   - வாராக் கடன் வியாபாரத்திற்கு ஒரு இழப்பாகும்.

6. **வாரா ஐயக்கடன் ஒதுக்கு பற்றி குறிப்பு வரைக**.
   - இருப்புநிலைக் குறிப்பில் பற்பல கடனாளிகளின் உண்மையான தொகையைக் காட்ட வேண்டுமெனில், வாரா ஐயக் கடன் ஒதுக்கு சரிகட்டப்பட வேண்டும்.
   - கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில், பற்பல கடனாளிகள் மீது, ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கிற்காக ஒதுக்கப்படும்.

7. **கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு பற்றி குறிப்பு வரைக**.
   - கடனாளிகள் உரிய நேரத்தில் பணத்தை செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு ரொக்க தள்ளுபடி வழங்கப்படுகிறது.
   - வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்குப்பின், மீதமுள்ள கடனாளிகள் திடமான கடனாளிகள் என அழைக்கப் படுகின்றனர்.
   - அவர்களில் சிலர் உரிய நேரத்தில் பணத்தை செலுத்தி, ரொக்கத் தள்ளுபடி பெற விரும்புவர்.
   - எனவே திடமான கடனாளிகள் மீது , ஒரு குறிப்பிட்ட சதவீதம் தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பவேண்டும்.

8. **கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு பற்றி குறிப்பு வரைக.**

- கடனாளிகளுக்கு ரொக்கத் தள்ளுபடி வழங்கப்படுவது போன்றே, நிறுவனம் கடனீந்தோருக்கு தொகையை உரிய நாளில் செலுத்துவதால் ரொக்கத் தள்ளுபடி பெற இயலும்.
- பற்பல கடனீந்தோர் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்குக்காகக் கணக்கிடப்படுகிறது.

9. **சரிக்கட்டுப்பதிவு என்றால் என்ன ?**

- ஒரு நிறுவனத்தில் சரிக்கட்டப்பட வேண்டிய செலவுகளும், வருமானங்களும் பல இருக்கும்.
- இத்தகைய இனங்கள் சரிக்கட்டப்படவில்லை எனில், இறுதிக் கணக்குகள் நிறுவனத்தின் செயல்பாட்டை உண்மையாக உணர்த்த இயலாது.
- இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் கணக்கேடுகளில் சேர்க்கப்படவேண்டிய இத்தகைய இனங்கள் " சரிக்கட்டுதல்கள் " எனப்படுகின்றன.
- இத்தகைய சரிக்கட்டுதல்களை , கணக்கேடுகளில் கொண்டு வருவதற்கு குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.
- இத்தகைய குறிப்பேட்டுப் பதிவுகள் " சரிக்கட்டுப் பதிவுகள் " எனப்படுகின்றன

10. **இறுதிச் சரக்கிருப்பு என்றால் என்ன ?**

- கணக்காண்டு இறுதியில் விற்காமல் உள்ள சரக்கின் மதிப்பு இறுதிச் சரக்கிருப்பு எனப்படும்.
- அடக்கவிலை அல்லது சந்தைவிலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.

11. **முதல் மீது வட்டி – குறிப்பு வரைக .**

- வியாபார நிறுவனம் முதலினை உரிமையாளரிடம் இருந்து கடனாக பெற்றதாகக் கொள்ளப்படுவதால் , முதல் மீது வட்டி அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.
- வியாபாரம் உண்மையிலேயே இலாபத்தில் இயங்குகிறதா என்பதைக் கண்டறிவதற்காக, முதல் மீது வட்டி ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் கணக்கிடப்பட்டு செலவாகப பதியப்படுகிறது.

12. **எடுப்புகள் மீது வட்டி – குறிப்பு வரைக**

- உரிமையாளர், தனது சொந்தச் செலவுக்காக தொழிலிலிருந்து பணம் எடுப்பது எடுப்புகள் எனப்படும்.
- நிறுவனம் முதல் மீது வட்டி அளிப்பதால், எடுப்புகள் மீது வட்டி உரிமையாளரிடமிருந்து பெறப்படுகிறது.
- எடுப்புகள் மீது வட்டி தொழிலுக்கு வருமானமாக அமைந்து, உரிமையாளரின் முதலைக் குறைக்கிறது.

13. **கடன் மீது வட்டி – குறிப்பு வரைக**

- வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வெளியாரிடமிருந்து வியாபாரத்திற்காக பணம் பெறுதல் ஆகியவை கடன் எனப்படுகிறது.
- கடனுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி, வியாபாரத்திற்கு ஒரு செலவினமாகும்.

14. **தேய்மானம் என்றால் என்ன?**

- **பயன்படுத்துதல் அல்லது வழக்கொழிவு காரணமாக நிலைச் சொத்தின் மதிப்பில் உண்டாகும் குறைவு தேய்மானம் எனப்படுகிறது.**
- **பொதுவாக, நிலைச்சொத்தின் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் தேய்மானமாக நீக்கப்படுகிறது.**

15. **குறிப்பு வரைக :**

**அ) <u>வியாபாரக் கணக்கு</u>**

- **வியாபாரம் என்பது வாங்குதல் மற்றும் விற்றலைக் குறிக்கின்றது.**
- **பொருளை வாங்குதல் மற்றும் விற்றலின் வெளிப்பாட்டினை, வியாபாரக் கணக்கு காண்பிக்கின்றது.**
- **ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் நிகர இலாபம் அல்லது நிகர நட்டத்தினை அறிதல் என்பது அவசியமாகும்.**
- **இதனை உணர மொத்த இலாபம் அல்லாத மொத்த நட்டத்தினை முதலில் அறிய வேண்டும்.**
- **இதனை வியாபாரக் கணக்கு தயாரிப்பதன் வாயிலாக அறியலாம்.**
- **அடக்கவிலைக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேற்றுமையே நிறுவனத்தின் மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டம் ஆகும்.**

**ஆ) <u>இலாப நட்டக் கணக்கு</u>**

- **மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்தினை கணக்கிட்டப்பின்னர் இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்படுகின்றது.**
- **நிகர இலாபத்தைப் பெறுவதற்கு, கொள்முதல் மற்றும் பொருளை உற்பத்தி செய்வதற்கான செலவுகள் மட்டுமல்லாது, ஏனைய பிற செலவுகளை ஒரு வணிகர் செய்கின்றார்.**
- **இவ்வாறு செய்யக்கூடிய செலவுகள் மொத்த இலாபத்தை விட குறைவாக இருக்குமேயானால் அதன் விளைவு நிகர இலாபம் ஆகும்.**
- **இவ்வாறான அனைத்துச் செலவுகளும் மொத்த இலாபத்தைவிட கூடுதலாக இருப்பின் அது நிகர நட்டம் ஆகும்.**

**இ) <u>இருப்புநிலைக் குறிப்பு</u>**

- **இது இறுதிக் கணக்குகளின் இரண்டாவது பகுதியாகும்.**
- **இவ்வறிக்கை வணிகத்தின் நிதிநிலையைக் காண்பிக்கக் கூடியதாகும்.**
- **இருப்புநிலைக் குறிப்பு அனைத்து ஆள்சார் கணக்குகள் (முதல் மற்றும் எடுப்புகள்), சொத்துக் கணக்குகள் மற்றும் இலாப நட்டக் கணக்கில் கிட்டிய நிகர முடிவையும் உள்ளடக்கியதாகும்.**
- **அனைத்துப் பற்றிருப்புகளும் வலதுப் பக்கத்தில் (சொத்துகள் பக்கத்தில்) எழுத வேண்டும்.**
- **வரவு இருப்புகளை இடது பக்கத்தில் (பொறுப்புகள் பக்கத்தில்) எழுத வேண்டும்.**
- **இதன் வாயிலாக வணிகத்தின் குறிப்பிட்ட நாளின் உண்மை நிதிநிலையை அறியமுடிகின்றது.**
- **இருப்பு நிலைக் குறிப்பு என்பது ஒரு அறிக்கையே.**
- **இவ்வறிக்கையானது பேரேட்டுக் கணக்குகளின் இருப்பிலிருந்து தயாரிக்கப்படுவதாகும்.**

## 1. முழுமை பெறாத பதிவேடுகள் என்றால் என்ன? (அல்லது) ஒற்றைப் பதிவு முறை என்றால் என்ன?

- நிறுவனத்தின் கணக்கேடுகளில், நடவடிக்கைகளின் இரு தன்மைகளும் பதியப்படவில்லை எனில், அவை முழுமை பெறாத பதிவேடுகள் அல்லது ஒற்றைப் பதிவு முறை எனப்படும்.
- ஒற்றைப் பதிவு முறை என்பது, ஒரு ஒழுங்கற்ற, முழுமையற்ற, தவறான, அறிவியல் தன்மையற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும்.
- இம்முறையில் ஆள்சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டுமே பதியப்படுகின்றன.
- சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் பதியப்படுவதில்லை.

## 2. ஒற்றைப் பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.

- கோஹ்லர் ( kohlar ) அவர்களின் கூற்றுப்படி,

" ஒற்றைப்பதிவு முறை என்பது, ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளின் பதிவுகளை மட்டுமே வைத்திருக்கும் கணக்குப்பதிவியல் முறையாகும். இது சூழ்நிலைக்கேற்றவாறு மாறக்கூடிய எப்பொழுதும் முழுமை பெறாத இரட்டைப் பதிவு முறையாகும்" .

## 3. ஒற்றைப் பதிவு முறையின் தன்மைகளுள் ஏதேனும் மூன்றினை விளக்கி எழுதுக.

1. <u>தனி வாணிக நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மட்டும் ஏற்றது</u> :
   - தனி வாணிக நிறுவனங்கள் அல்லது கூட்டாண்மை நிறுவனங்கள் மட்டுமே இம்முறையைப் பயன்படுத்துகின்றன.
   - சட்ட நிபந்தனைகள் காரணமாக நிறுமங்கள் ஒற்றைப் பதிவு முறையைப் பயன்படுத்துவது இல்லை.
2. <u>ஆள்சார் கணக்குகள் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டும் பராமரிப்பு</u> :
   - இம்முறையில் ஆள்சார் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.
   - சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகளின் பராமரிப்பது இல்லை.
   - ஒரே ரொக்க ஏட்டில் தொழில் சார்ந்த மற்றும் சொந்த நடவடிக்கைகள் பதியப்படுகின்றன.
3. <u>அனைத்து நடவடிக்கைகளும் பதியப்படுவதில்லை :</u>
   - அனைத்து நடவடிக்கைகளும் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை.
   - சில நடவடிக்கைகள் கணக்கேடுகளிலும், சில நடவடிக்கைகள் நாட்குறிப்பிலும் பதியப்படுகின்றன.
   - சில நடவடிக்கைகள் எதிலும் பதியப்படாமல், நினைவில் வைத்து கொள்ளப்படுகின்றன.
4. <u>ஒழுங்கு முறையின்மை :</u>
   - தனி நபர்களின் வசதிக்கேற்ப இரட்டைப் பதிவு முறை மாற்றியமைக்கப்படுவதால், அனைவருமே பயன்படுத்தும் வகையில் ஒழுங்கு முறை இல்லை.

5. **<u>தோராய இலாபத்தை மட்டும் அறிதல் :</u>**

❖ இம்முறையில் கணக்கிடப்படும் இலாபம், தோராயமானது ஆகும்.

❖ இலாபத்தைத் துல்லியமாகக் கணக்கிட இயலாது.

6. **<u>உண்மையான நிதி நிலையை அறிய இயலாமை :</u>**

❖ சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் பராமரிக்கப்படாத காரணத்தினால், உண்மையான நிதிநிலையை உணர்த்தும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்ய முடியாது.

7. **<u>வரி விதிப்பு அதிகாரிகளின் நிராகரிப்பு</u>** :

❖ இம்முறையின் முழுமையின்மை, துல்லியமின்மை, ஒழுங்கின்மை காரணமாக வரிவிதிப்பு அதிகாரிகள் இம்முறையை நிராகரிக்கின்றனர்.

---

## 4. ஒற்றைப் பதிவு முறையின் குறைபாடுகள் மூன்றினைக் கூறு.

### 1. முழுமையற்ற மற்றும் விஞ்ஞான அடிப்படையற்ற முறை :

❖ இம்முறையில் சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் பராமரிக்கப்படுவதில்லை.

❖ மேலும் அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படுவதில்லை. எனவே இது ஒரு முழுமையற்ற முறையாகும்.

2. **<u>உண்மையான நிதிநிலையை அறிய இயலாதது</u>** :

❖ இருப்பு நிலைக் குறிப்பினை தயாரிக்க இயலாத காரணத்தால் நிறுவனத்தின் உண்மையான நிதிநிலையை அறிய இயலாது.

3. **<u>வரிவிதிக்கும் அதிகாரிகளின் நிராகரிப்பு</u>** :

❖ வருமானவரி, விற்பனை வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரிகள், வரி கணக்கிடுவதற்கு ஒற்றைப் பதிவு முறையை நிராகரிக்கின்றனர்.

4. **<u>கடன் பெறுவதில் இடர்ப்பாடு</u>** :

❖ வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் ஒற்றைப் பதிவு முறையை ஏற்காத காரணத்தால்,
இம்முறையைப் பின்பற்றும் வியாபார நிறுவனங்கள் அவற்றிலிருந்து கடன் பெறுவது இயலாது.

5. **<u>வியாபார நிறுவனத்தின் உண்மை விலையை நிர்ணயிக்க இயலாமை</u>** :

❖ உண்மையான இலாபம், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பை அறிய இயலாத காரணத்தால், வியாபார நிறுவனத்தை விற்க முற்படும் போது, உண்மையான விலையை நிர்ணயிக்க இயலாது.

---

## 5. நிகர மதிப்பு முறை என்றால் என்ன ?

❖ நிகர மதிப்பு முறையினை, நிலை அறிக்கை முறை அல்லது முதல் ஒப்பீட்டு முறை எனப்படுகின்றது.

❖ ஒற்றைப் பதிவு முறையில் கணக்கேடுகள் பராமாரிக்கப்படுகையில்,இலாபம் அல்லது நட்டம் கணக்கிட இம்முறை பயன்படுத்தப் படுகிறது.

❖ சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து தொடக்க முதலை கழித்தபின் கிடைப்பது இலாபம் அல்லது நட்டமாக இருக்கும்.

---

## 6. மாற்றுதல் முறை என்றால் என்ன ?

❖ ஒற்றைப் பதிவு முறையில் உள்ள பதிவுகளைக் கொண்டு வியாபாரக் கணக்கு மற்றும் இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்படுவது மாற்றுதல் முறை எனப்படுகிறது.

7. **நிலை அறிக்கை என்றால் என்ன ?**

- ஒற்றைப் பதிவு முறையில் கணக்கேடுகள் பராமரிக்கப்படுகையில், "முதல்" ( தொடக்க முதல் அல்லது இறுதி முதல் ) கண்டறியப்படுவது நிலை அறிக்கை ஆகும்.
- நிலை அறிக்கை என்பது இருப்பு நிலைக் குறிப்பைப் போன்றது.
- சொத்துகள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையேயான வேறுபாடு முதல் ஆகும்.

8. **ஒற்றைப் பதிவு முறைக்கும், இரட்டைப் பதிவு முறைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை ?**

| வ.எண் | அடிப்படை | இரட்டைப் பதிவு முறை | ஒற்றைப் பதிவு முறை |
|---|---|---|---|
| 1 | கொள்கை | ஒவ்வொரு பற்றுக்கும் நிகரான வரவும்,ஒவ்வொரு வரவுக்கும் நிகரான பற்றும் உண்டு. | ஒவ்வொரு பற்றுக்கும் நிகரானவரவோ, ஒவ்வொரு வரவுக்கும் நிகரான பற்றோ இல்லை. |
| 2 | நடவடிக்கைகளின் பதிவு | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படுகின்றன. | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படுவது இல்லை. |
| 3 | பராமரிக்கப்படும் கணக்குகளின் இயல்பு | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுகின்றன. | ஆள்சார் மற்றும் ரொக்க நடவடிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. எனவே இது ஒரு முழுமையற்ற முறை. |
| 4 | இருப்பாய்வு | கணக்குகளின் சரித்தன்மையை அறிய இருப்பாய்வு தயாரிக்க இயலும். | இருப்பாய்வு தயாரிக்க இயலாது |
| 5 | பொருத்தம் | அனைத்து வகைத் தொழில் அமைப்புகளுக்கும் இம்முறை ஏற்றது. | சிறு நிறுவனங்களுக்கு மட்டுமே இம்முறை ஏற்றது. |
| 6 | ஏற்கும் தன்மை | வரி விதிப்பு, கடன் பெறுதல் போன்ற நோக்கங்களுக்கு இம்முறை ஏற்கப்படுகிறது | வரி விதிப்பு, கடன் பெறுதல் போன்ற நோக்கங்களுக்கு இம்முறை ஏற்கப்படுவது இல்லை. |
| 7 | அகத் தணிக்கை | இம்முறையில் அகத் தணிக்கையை செயல்படுத்த இயலும். | இம்முறையில் அகத் தணிக்கையை செயல்படுத்த இயலாது. |

# அத்தியாயம் - 3 தேய்மானக் கணக்குகள்

1. **தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக.**

- **ஸ்பைசர் & பெக்லரின் ( spicer & Pegler ) கூற்றுப்படி,**
  "தேய்மானம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், எக்காரணத்தாலும் ஏற்படும் ஒரு சொத்தின் வாழ்நாள் இழப்பைக் குறிக்கும் அளவாகும்".

  ( அல்லது )

- **கார்டர் அவர்களின் கூற்றுப்படி,**
  "தேய்மானம் என்பது பயன்பாடு மற்றும் காலப்போக்கு காரணமாக சொத்தின் உண்மையான மதிப்பில் ஏற்படும் குறைவே ஆகும்".

2. **நிலைச் சொத்து என்றால் என்ன ?**

- நீண்ட காலத்திற்கு பயனளிக்கக் கூடிய அனைத்து சொத்துகளும் நிலைச் சொத்துகள் ஆகும்.
- வழக்கமாக ஒரு ஆண்டிற்கு மேல் பயன்தரக்கூடிய சொத்துகளை நிலைச் சொத்துகள் எனலாம். (எ.கா) : நிலம், கட்டிடம், இயந்திரம்
- இந்நிலைச் சொத்துகள், தேய்வு அல்லது காலப்போக்கு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மதிப்பை இழக்கிறது.

3. **எறி மதிப்பு என்றால் என்ன ?**

- ஒரு சொத்தின் பயனளிப்பு காலம் முடிவடைந்த பிறகு, அதை விற்கும் பொழுது கிடைக்கக்கூடிய மதிப்பை உணர்த்துவது எறிமதிப்பு ஆகும்.
- இது ' இறுதி மதிப்பு ' எனவும் அழைக்கப்படுகிறது

4. **வழக்கொழிவு என்றால் என்ன ?**

- புதிய கண்டுபிடிப்புகள், முன்னேறிய செய்முறைகள், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக பழைய சொத்துகள் பயனற்றவை ஆகின்றன.
- தொழிலுக்கு வெளியே இருந்து தோன்றக்கூடிய இந்த புறக் காரணம் ' வழக்கொழிவு ' எனப்படும்.

5. **காலப்போக்கு என்றால் என்ன ?**

- சொத்துகளை பயன்படுத்தாவிட்டாலும், பருவ மாற்றம், காற்று, மழை போன்ற இயற்கைக் காரணிகளாலும் மதிப்பு குறைவதே காலப்போக்கு எனப்படும்.

6. **நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன ?**

- இம்முறையில் அடக்கச் சொத்தின் மீது தேய்மானம் கணக்கிடப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் சீராக சொத்தின் வாழ்நாள் முழுவதும் தேய்மானம் நீக்கப்படுகிறது.

$$\text{தேய்மானத்தொகை} = \frac{\text{மொத்த அடக்கவிலை} - \text{இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{தேய்மானத்தொகை}}{\text{மொத்த அடக்க விலை}} \times 100$$

7. **தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்பதற்கான சூத்திரங்கள் தருக.**

( வினா எண் : 6 ல் உள்ளதை எடுத்து எழதவும்)

8. **பல்வேறு தேய்மானம் கணக்கிடும் முறைகள் யாவை?**

1. நேர்க்கோட்டு முறை ( அ ) உண்மை அடக்கவிலை முறை
2. குறைந்த செல் மதிப்பு முறை ( அ ) குறைந்த செல் இருப்பு முறை
3. ஆண்டுத் தொகை முறை
4. தேய்மான நிதி முறை
5. காப்பீட்டு முனைம முறை
6. மறுமதிப்பீட்டு முறை

9. **மறுமதிப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் பற்றி குறிப்பு வரைக.**

- மறுமதிப்பீட்டு முறையில் விடு கருவிகள் போன்ற சொத்துக்களின் ஆண்டிறுதி மதிப்பு, ஆண்டுத் தொடக்க மதிப்போடு ஒப்பிடப்படுகிறது.
- இரண்டிற்குமுள்ள வேறுபாட்டுத் தொகை தேய்மானமாகக் கருதப்படுகிறது.

10. **காப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் பற்றி குறிப்பு வரைக.**

- காப்பீட்டு முனைம முறையில் சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்தபிறகு, அதே சொத்தை புதிதாக வாங்குவதற்கு தொகை பெறும் வகையில் சொத்து காப்பீடு செய்யப்பட்டிருக்கும்.
- ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத் தொகை முனைமமாகச் செலுத்தப்படுகிறது.
- இந்தத் தொகை பழைய சொத்திற்கு பதிலாக புதிய சொத்து பெறுவதற்குப் பயன்படுகிறது.

11. **தேய்மானம் நீக்கவேண்டியதன் தேவைகள் யாவை ?**

1. <u>சரியயான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய</u> :
   - ஒவ்வொரு கணக்காண்டிலும் சரியான நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் கண்டறிய தேய்மானம் ஒரு செலவாகக் கருதப்பட்டு வருவாயில் சரி செய்ய வேண்டும்.
2. <u>உண்மையான நிதிநிலையை உணர்த்த</u> :
   - இருப்புநிலைக் குறிப்பில் உண்மையான நிதிநிலையை உணர்த்த வேண்டுமெனில், அதில் இடம்பெற்றுள்ள சொத்துகளின் உண்மையான மதிப்பிலிருந்து தேய்மானம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருக்க வேண்டும்.
3. <u>உண்மையான உற்பத்தி செலவைக் கண்டறிய</u> :
   - பொருள்களின் உண்மையான உற்பத்தி செலவைக் கண்டறிய நிலைச் சொத்துகளின் மீதான தேய்மானம் விலக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. <u>சட்டத் தேவைகளைப் பின்பற்ற</u> :
   - நிறுமங்கள் சட்டம் 1956, பிரிவ்வு 205 (1) ன் படி, பங்காதாயம் அறிவிப்புக்கு முன்பாக நிறுமங்கள் கட்டாயமாக நிலைச் சொத்துகளின் மீதான தேய்மானத்தை விலக்கியிருத்தல் வேண்டும்.

5. <u>பழைய நிலைச் சொத்துகளுக்கு பதிலாக புதிய நிலை சொத்துகளை இடம் பெறச் செய்ய :</u>
   - பழைய நிலைச் சொத்துகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகையில், புதிய நிலைச் சொத்துகளை நிறுவனத்தில் இடம் பெறச் செய்ய தேய்மானம் நீக்குதல் அவசியமாகிறது.

## 12. அகக்காரணங்களால் தேய்மானம் எவ்வாறு ஏற்படுகின்றன?

- அகக் காரணங்கள் என்பவை இயற்கையாக அமையப் பெற்ற காரணங்களாகும்.

1. <u>தேய்வு</u> :
   - புலனாகும் சொத்துகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் தேய்வு காரணமாக தேய்மானம் ஏற்படுகிறது.
2. <u>உபயோகிக்கப்படாமை</u> :
   - தொடர்ந்து ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்தாமல் இருந்தால் அது தன் உபயோகத் தன்மையை இழந்து விடுகிறது.
3. <u>பராமரிப்பு இன்மை</u> :
   - ஒரு இயந்திரம் சரிவரப் பராமரிக்கப் படவில்லை எனில் அது தன் உபயோகத் தன்மையை விரைவாக இழந்து விடுகிறது.
4. <u>வெறுமையாதல்</u> :
   - சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள் போன்வற்றிலிருந்து, கனிம வளங்களைத் தொடர்ந்து வெளியே எடுப்பதால், அவை தமது மதிப்பினை இழக்கின்றன.
   - இதுவே வெறுமையாதல் என அழைக்கப்படுகிறது.

## 13. புறக்காரணங்களால் எவ்வாறு தேய்மானம் ஏற்படுகின்றன?

1. <u>வழக்கொழிவு</u> :
   - புதிய கண்டுபிடிப்புகள், முன்னேறிய செய்முறைகள்,தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக, பழைய சொத்துகள் பயன் அற்றவைகளாகின்றன.
2. <u>காலப்போக்கு</u> :
   - சொத்துகளை பயன்படுத்தாவிட்டாலும், பருவ மாற்றம், காற்று, மழை போன்ற இயற்கைக் காரணிகளாலும் மதிப்பு குறைகிறது.
3. <u>கால நிர்ணயம்</u> :
   - குத்தகை, பதிப்புரிமை, தனியுரிமை போன்றவை குறிப்பிட்ட காலத்திற்குப் பெறப்படுகின்றன.
   - குறிப்பிட்ட காலம் கடந்த பிறகு இவ்வகை சொத்துகள் மதிப்பிழந்து விடுகின்றன.

## 14. தேய்மானம் தொடர்பான கலைச் சொற்களை விவரி.

1. <u>போக்கெழுதல்</u> :
   - இது நற்பெயர், புனையுரிமை மற்றும் தொடக்கச் செலவுகள் போன்ற புலனாகாச் சொத்துகளின் மதிப்பு குறைதலைக் குறிக்கிறது.
2. <u>வெறுமையாதல்</u> :
   - இது சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள் போன்ற இயற்கை வளங்களின் மதிப்பு குறைதலைக் குறிக்கிறது.
   - நாம் அதிகமாக இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதனால் அவற்றின் இருப்பு குறைகிறது.

3. **வழக்கொழிவு** :

- புதிய கண்டுபிடிப்புகள், முன்னேறிய செய்முறைகள், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவைகள் காரணமாக சொத்துகள் மதிப்பு இழத்தலைக் குறிக்கிறது.

---

15. **தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகளை விவரி.**

1. **சொத்தின் உண்மை அடக்க விலை** :
   - சொத்தைப் பெறுவதற்கான அடக்க விலை, நிறுவுகைச் செலவு, முதலினத் தன்மை கொண்ட மேம்படுத்தும் செலவுகள் போன்றவற்றை இது உள்ளடக்கியது.
2. **எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்** :
   - ஒரு சொத்தை எவ்வளவு காலம் பயன்படுத்தலாம் என்பதை இது உணர்த்துகிறது.
3. **இறுதி மதிப்பு** :
   - ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிவடைந்த பிறகு அதை விற்கும் பொழுது கிடைக்கக் கூடிய மதிப்பை இது உணர்த்துகிறது.
   - இது 'எறி மதிப்பு' எனவும் அழைக்கப்படுகிறது.

---

16. **தேய்மானம் கணக்கிடும் முறைகளை விவரி.**

1. **நேர்கோட்டு முறை (அ) நிலைத்தவனை முறை** :
   - இம்முறையில் அடக்க சொத்தின் மீது தேய்மானம் கணக்கிடப்படுகிறது.
   - இதனால் ஒவ்வொரு ஆண்டும் சீராக சொத்தின் வாழ்வு முழுவதும் தேய்மானம் நீக்கப்படுகிறது.
2. **குறைந்த செல் மதிப்பு முறை (அ) குறைந்த செல் இருப்பு முறை** :
   - இம்முறையில், ஆண்டுத் தொடக்கத்தில் இருந்த இருப்பு மீது தேய்மானம் கணக்கிடப்படும்.
   - எனவே ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத் தொகை குறைந்து கொண்டே செல்லும். இந்த முறை வரி விதிப்பைக் கணக்கிட உதவுகிறது.
3. **காப்பீட்டு முனைம முறை** :
   - இம்முறையில் ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத் தொகை முனைமமாகச் செலுத்தப்படுகிறது.
   - காப்பீட்டுக் காலம் முடிவடையும் போது தொகை பெறப்படுகிறது.
   - இந்தத் தொகை பழைய சொத்திற்குப் பதிலாக புதிய சொத்து பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
4. **மறு மதிப்பீட்டு முறை** :
   - இம்முறையில் சொத்துக்களின் இறுதி மதிப்பு தொடக்க மதிப்போடு ஒப்பிடப்படுகிறது.
   - இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டுத்தொகை தேய்மானம் ஆகும்.
   - விடுகருவி போன்ற சொத்துக்கள் மீது தேய்மானம் கணக்கிட இம் முறை பயன்படுத்தப்படுகிறது.
5. **ஆண்டுத் தொகை முறை** :
   - சொத்து வாங்குவதற்கான பணத்தினை வேறு வகையில் முதலீடு செய்திருந்தால் வட்டி பெறப்பட்டிருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இக்கருத்து அமைகிறது.

- ➢ இம்முறையில் ஆண்டுத் தொகை அட்டவணையைக் கொண்டு தேய்மானத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.
- ➢ இம்முறை குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட பயன்படுத்தப்படுகிறது.

6. <u>தேய்மான நிதி முறை (அ) ஈடு நிதி முறை :</u>
   - ➢ தேய்மானத் தொகை குறிப்பிட்ட வட்டி வீதம் தரக்கூடிய பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது.
   - ➢ ஒவ்வொரு ஆண்டும் பெறப்படும் வட்டியும், தேய்மானத் தொகையும் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகின்றன.
   - ➢ சொத்தை மாற்றவேண்டிய நிலை வரும்பொழுது, முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரங்கள் விற்க்கப்பட்டு, அத்தொகை மூலம் புதிய சொத்து வாங்கப்படும்.
   - ➢ இம்முறையில் தேய்மானம், தேய்மான நிதி அட்டவணை மூலம் கணக்கிடப்படுகிறது.

---

## 17. நேர்க்கோட்டு முறை தேய்மானக் கணக்கீட்டு முறையின் நன்மை, தீமைகளை விவரி.

<u>நன்மைகள்</u> :

1. <u>எளிமை</u> :
   - ❖ இந்த முறை மிகவும் எளிமையானதோடு, எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதும் ஆகும்.
2. <u>எளிமையான கணக்கீடு</u> :
   - ❖ தேய்மானத் தொகையையும், தேய்மான விகிதத்தையும் கணக்கீடு செய்வது மிகவும் எளிது.
3. <u>சொத்தின் மதிப்பு முழுமை நீக்கம்</u> :
   - ❖ இந்த முறையில் சொத்தின் ஏட்டு மதிப்பு, அதன் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு முழுமையாக அல்லது இறுதி மதிப்புக்குச் சமமாக நீக்கப்படுகிறது.

<u>தீமைகள் :</u>

- ❖ சொத்தின் பயன்பாடு இறுதி ஆண்டுகளை விடத் தொடக்க ஆண்டுகளில் அதிகமாக இருந்தாலும், தேய்மானத் தொகை, அனைத்து ஆண்டுகளிலும் சமமாக நீக்கப்படுகிறது.

---

## 18. குறைந்து செல் மதிப்பு முறை தேய்மானக் கணக்கீட்டு முறையின் நன்மை, தீமைகளை விவரி.

<u>நன்மைகள் :</u>

1. <u>பல்வேறு ஆண்டுகளின் இலாப நட்டக் கணக்கில் சீரான தாக்கம்</u> :
   - ❖ பொதுவாக தொடக்க ஆண்டுகளில் தேய்மானத் தொகை அதிகமாகவும், பராமரிப்புச் செலவு குறைவாகவும் இருக்கும்.
   - ❖ அதே போன்று இறுதி ஆண்டுகளில் தேய்மானத் தொகை குறைவாகவும், பராமரிப்புச் செலவு அதிகமாகவும் இருக்கும்.
   - ❖ எனவே, மொத்தச் செலவு (தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவு) ஒவ்வொரு ஆண்டும் சீராக இருப்பதை இம்முறை உறுதி செய்கிறது.
2. <u>வருமான வரி விதிக்கும் அதிகாரிகளின் ஏற்பு</u> :
   - ❖ இம் முறையை, வருமான வரி விதிக்கும் அதிகாரிகள் ஏற்கின்றனர்.

3. <u>நியாயமான முறை</u> :

- ❖ ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் குறைந்த இருப்பு மீது தேய்மானம் கணக்கிடப்படுவதால் இது நியாயமான முறையாகும்.

**<u>தீமைகள்</u>** :

- ❖ சொத்தின் மதிப்பை முற்றிலும் போக்கெழுதுவதற்கான தேய்மான விகிதத்தினை நிர்ணயிக்க இயலாது.

---

# <u>அத்தியாயம் - 4 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு - விகித ஆய்வு</u>

## 1. நிதிநிலை அறிக்கை பகுப்பாவு செய்வதன் முக்கியத்துவம் யாது ?

i) வணிக நிறுவனத்தின் ஈட்டும் திறன் அல்லது இலாபத் தன்மையை கணித்தல்.

ii) வணிக நிறுவனத்தின் குறுங்கால மற்றும் நீண்ட கால வகையுடைமையை ஆய்வு செய்தல்.

iii) பல்வேறு அமைப்புகளுக்கு இடையேயான ஒப்பு நோக்கு ஆய்வினை மேற்கொள்ள உதவுதல்.

iv) திட்டப் பட்டியல் தயாரிக்க உதவுதல்.

---

## 2. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் குறைபாடுகள் யாவை?

1. இந்த ஆய்வு, இது நாள் வரையில் என்ன நடந்தது என்பதை எடுத்துரைக்குமே தவிர, எதிர்காலத்தைப் பிரதிபலிக்காது.
2. இது விலையில் ஏற்பட்ட மாற்றத்தினைக் கருத்தில் கொள்வது இல்லை.
3. நிதிநிலை ஆய்வில், பணச் சார்புடைய கருத்துகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றன. மாறாக தரச் சார்புடையவைகள் நிராகரிக்கப்படுகின்றன.
4. நிதிநிலை அறிக்கையின் சரித்தன்மையைப் பொறுத்தே ஆய்வு முடிவு இருக்கும்.
5. ஆய்வு முடிவைக் காண்பதற்கான ஒரு வழிமுறையே தவிர, அதுவே முடிவல்ல.

---

### 3. நடப்பு விகிதத்தினை விளக்குக.

- ❖ ஒரு நிறுவனத்தின் நடப்புப் பொறுப்புகளை எதிர்நோக்கும் திறனை அளவிட இவ்விகிதம் உதவுகிறது.
- ❖ நடப்புச் சொத்துகள் மற்றும் நடப்புப் பொறுப்புகளுக்கு இடையேயான உறவானது நடப்பு விகிதம் ஆகும்.

$$\text{நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}}$$

- ❖ நடப்புச் சொத்துகள் என்பது ஒரு வருடத்திற்குள் ரொக்கமாகக் கூடிய சொத்துகளை குறிக்கின்றது.

| |
|---|
| இதில் கை ரொக்கம், வங்கி ரொக்கம், பற்பல கடனாளிகள், பெறுவதற்குரிய மாற்றுச் சீட்டுகள், குறுங்கால முதலீடுகள் அல்லது சந்தையிடுகை பிணையங்கள், சரக்கிருப்பு மற்றும் முன்செலுத்திய செலவினங்கள் அடங்கும். |

- ❖ நடப்புப் பொறுப்புகள் என்பது ஒரு வருடத்திற்குள் செலுத்தக்கூடிய அனைத்து பொறுப்புகளையும் குறிக்கின்றன.

இதில் வங்கி மேல்வரைப் பற்று, பற்பலக் கடனீந்தோர், செலுத்துவதற்குரிய மாற்றுச்சீட்டுகள் மற்றும் கொடுபட வேண்டிய செலவினங்கள் அடங்கும்.

**4. விகிதம் வரைவிலக்கணம் தருக.**

- கென்னடி மற்றும் மேக்மிலன் கூற்றுப்படி " விகிதம் என்பது ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்று இருக்கக்கூடிய உறவினை எளிய கணிதவியல் முறையில் கூறுவதை விளக்குகிறது.

**5. புற - அகப் பொறுப்புகள் விகிதம் கணக்கிடப்படுவதன் தேவை யாது?**

- இவ்விகிதம் நிறுவனத்தின் நீண்டகால நிதிநிலையின் வகையுடைமையை கணிக்க உதவுகின்றது.
- இது மொத்த நீண்ட காலக் கடன் மற்றும் பங்குதாரர்களின் நிதிக்கான உறவை உணர்த்துகின்றது.
- இது பங்குதாரரின் நிதியில், நீண்ட காலக் கடன் எந்த விதத்தில் அமைந்துள்ளது என்பதைக் குறிக்கின்றது.
- மேலும் எந்த அளவிற்கு நிறுவனம் வெளியோரைச் சார்ந்துள்ளது என்பதை காண்பிக்கின்றது.

$$\text{புற-அகப் பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{மொத்த நீண்டகாலக் கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$$

**6. இலாபத்தன்மை விகிதங்கள் யாவை?**

1. மொத்த இலாப விகிதம்
2. நிகர இலாப விகிதம்
3. இயக்க இலாப விகிதம்
4. இயக்க விகிதம்

**7. முதல் விற்பனை விகிதம் யாது ?**

- முதலை திறமையாக பயன்படுத்துவது அதிக இலாபத் தன்மைக்கு உறுதுணை புரிவது ஆகும்.
- விற்பனைக்கும், பயன்படுத்தப்பட்ட முதலுக்கும் இடையேயான உறவினை குறிக்கும் விகிதம் முதல் விற்பனை விகிதம் என்ப்படும்.

**8. இயக்க விகிதம் பற்றி குறிப்பு வரைக.**

- வணிக நிறுவனத்தின் இயக்க திறனை இது நிர்ணயிக்கிறது.
- இயக்க விகிதம் தயாரிப்புச் செலவுகள், விற்பனைச் சொலவுகள் மற்றும் பகிர்வு செலவுகளை அளவிடுகிறது.
- இவ்விகிதம் இயக்க செலவிற்கும், விற்பனைக்கும் இடையேயான உறவினைக் கூறுவதாகும்.

## 9. செயல்பாட்டு விகிதங்கள் யாவை?

1) முதல் - விற்பனை விகிதம்
2) நிலையான சொத்துக்கள் விற்பனை விகிதம்
3) சரக்கிருப்பு விற்பனை விகிதம்
4) கடனாளிகள் விற்பனை விகிதம்
5) கடனீந்தோர் கொள்முதல் விகிதம்

- செயல்பாட்டு விகிதத்தை விற்பனை விகிதம் எனவும் குறிப்பிடலாம்.

## 10. கடனாளிகள் விற்பனை விகிதம் என்றால் என்ன ?

- இது கடன் விற்பனைக்கும் கணக்கு மூலமாக பெற வேண்டியவைகளின் சராசரிக்கும் இடையேயான உறவினை எடுத்து உரைப்பதாகும்.
- கடனாளிகள் விற்பனை விகிதம், கடனாளிகளிடமிருந்து நிறுவனம் பெற வேண்டிய தொகையை வசூலிக்கும் திறனை விளக்குகின்றது.

## 11. வகையுடைமை விகிதங்களை விவரிக்க.

- இது நிறுவனத்தின் நீண்ட கால கடனை எதிர்நோக்கும் திறனைக் குறிக்கின்றது.
- இவ்விகிதங்கள் வாயிலாக நிறுவனம் எங்ஙனம் நீண்ட கால பொறுப்புகளை எதிர்நோக்குகின்றது என்பதை உணர உதவுகின்றது.
- வகையுடைமை விகிதங்களில் முக்கியமாக கணக்கிட கூடியவைகள் பின்வருமாறு :

1. புற-அகப் பொறுப்புகள் விகிதம்
2. உரிமையாளர் விகிதம்யுடைமை விகிதங்களை விவரிக்க.

# அத்தியாயம் - 5 ரொக்கத் திட்டப்பட்டியல்

## 1. திட்டப்பட்டியலுக்கு இலக்கணம் தருக

- லாங்மென் வணிகவியல் சார் ஆங்கில அகராதியின் படி ஒரு திட்டப்பட்டியல் என்பது, "எதிர்காலத்தில் நிகழக்கூடிய வரவு மற்றும் செலவுகளை உள்ளடக்கிய ஒரு கணக்காகும்."

( அல்லது )

- லண்டன், அடக்கவிலை மற்றும் மேலாண்மை கணக்கர்களின் அமைப்பின்படி திட்டப்பட்டியல் என்பது, "அறுதியிட்ட காலகெடுவிற்கு, அக்காலக் கட்டத்தில் பின்பற்றக் கூடிய கொள்கையின் அடிப்படையில், நிர்ணயித்த இலக்கை அடைய, தயாரிக்கப்பட இருக்கும் ஒரு நிதி சார்ந்த மற்றும் அல்லது எண்ணிக்கை அடிப்படையிலான அறிக்கையாகும்."

## 2. திட்டப்பட்டியலுக்கான தன்மைகள் யாவை ?

திட்டப்பட்டியலின் தன்மைகள் அல்லது இயல்புகள் :

1) இது எதிர்காலம் குறித்து முன்னரே தயாரிக்கக் கூடியது ஆகும்.
2) இது பணம் மற்றும் / அல்லது அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் தெரிவிக்கக் கூடியது.
3) இது திட்ட இலக்கை அடைவதற்கான வழி.

3. **ரொக்கத் திட்டப்பட்டியல் குறித்து குறிப்பு வரைக.**

- ரொக்கத் திட்டப்பட்டியல் என்பது ரொக்கம் மற்றும் திட்டப்பட்டியல் என்ற இரு சொற்களை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு கூறு ஆகும்.
- ரொக்கம் என்ற சொல், ரொக்கம் மற்றும் வங்கியிருப்பைக் குறிப்பதாகும்.
- திட்டப்பட்டியல் என்பது ஒரு அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதாகும்.
- வணிகத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படக் கூடிய ஒவ்வொரு ரொக்க நடவடிக்கையையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படும் மிக முக்கிய திட்டப்பட்டியல்களில் ஒன்றாக விளங்குவது ரொக்கத் திட்டப்பட்டியல் ஆகும்.
- இது எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் குறித்த ஒரு அறிக்கை ஆகும்.
- ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் ஏற்படும் ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களை ரொக்கத் திட்டப்பட்டியல் காண்பிக்கின்றது.
- இதனை 'நிதி திட்டப்பட்டியல்' என்றும் அழைக்கலாம்.

4. **ரொக்கத் திட்டப்பட்டியலின் நன்மைகள் யாவை ?**

1) இது போதுமான ரொக்க இருப்பை பேண உதவுகிறது.
2) மேலாண்மைக்கு பயனளிக்கும் வகையில் பின்வரும் செய்திகளை அளிக்கின்றது.

அ. வணிகத்தின் எதிர்கால ரொக்க தேவையை நிர்ணயிக்க.

ஆ. நிதி தேவையை பூர்த்தி செடீநுயும் திட்டம் தீட்ட

இ. வணிக அமைப்பின் ரொக்க இருப்பில் கட்டுப்பாட்டினை ஏற்படுத்த.

- ஆகவே, ரொக்கத் திட்டப்பட்டியல் ஒரு பயனளிக்கும் நிதி திட்டமிடும் கருவி என சுருங்கக் கூறலாம்.

5. **ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்கப் பயன்படுத்தும் முறைகளை வரிசைப்படுத்துக.**

1) பெறுதல் மற்றும் செலுத்தல் முறை
2) சரிக்கட்டப்பட்ட இலாப நட்ட கணக்கு முறை அல்லது ரொக்க ஓட்ட முறை
3) இருப்பு நிலைக் குறிப்பு முறை

6. **ரொக்கப் பெறுதல்களுக்கு உதாரணம் தருக.**

1) ரொக்க விற்பனை
2) வாடிக்கையாளரிடம் பெறக் கூடிய தொகை
3) வட்டி, கழிவு, பங்காதாயம் போன்ற வணிக வரவுகள்.
4) சொத்து விற்பனை
5) பங்குகள் / கடனீட்டுப் பத்திரங்களின் வெளியீடு மூலம் பெறப்படும் தொகை
6) பெற்ற கடன்

7. **ரொக்கச் செலுத்தல்களுக்கு உதாரணம் தருக.**

1) ரொக்கக் கொள்முதல்
2) சரக்களித்தோருக்கு செலுத்தக்கூடிய தொகை

3) கூலி அலுவலகச் செலவுகள், விற்பனைச் செலவுகள் போன்ற வணிகச் செலவுகள்
4) செலுத்தவேண்டிய வட்டி, வருமான வரி, பங்காதயம் போன்றவை
5) சொத்துகளை வாங்குதல்
6) பங்குகள் / கடனீட்டுப் பத்திரங்களை மீட்டல்
7) கடனை திரும்ப செலுத்துதல்.

**8. ரொக்கத் திட்டப் பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்குக.**

நிலை 1 → தொடக்க ரொக்க இருப்பை எடுத்துக் கொள்க.

நிலை 2 → அம்மாதத்தில் பெற வேண்டிய மொத்த ரொக்க பெறுதல்களை மதிப்பிட்டு கூட்டுக.

நிலை 3 → அம்மாதத்தில் மொத்த ரொக்க இருப்பைக் கணக்கிடுக.

நிலை 4 → அம்மாதத்தில் மொத்த ரொக்கச் செலுத்தல்களை மதிப்பிட்டு கழிக்க.

நிலை 5 → இறுதி ரொக்க இருப்பை கணக்கிடுக.

# அத்தியாயம் - 6 கூட்டாண்மைக் கணக்குகள் - அடிப்படைக் கருத்துகள்

**1. கூட்டாண்மை - வரைவிலக்கணம் தருக.**

- ❖ இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932, பிரிவு 4 -ன் படி, கூட்டாண்மை என்பது “அனைவருமோ, அனைவரின் சார்பில் அவர்களில் எவரோ, ஒரு தொழிலை நடத்தவும், அதில் ஏற்படும் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டு அந்த நபர்களிடையே ஏற்படும் உறவு ஆகும்”

**2. எடுப்பு என்றால் என்ன?**

- ❖ தன் சொந்தப் பயனுக்காக ரொக்கமாகவோ, பொருளாகவோ தொழிலிருந்து எடுத்துக் கொண்டால் அது எடுப்பு எனப்படும்.
- ❖ ஒவ்வொரு கூட்டாளியின் பெயரிலும் எடுப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அவர்களின் எடுப்புகள் அக்கணக்குகளில் பற்று வைக்கப் படும்.

**3. நற்பெயர் என்றால் என்ன?**

- ❖ நற்பெயர் என்பது நிறுவனம் வருங்காலத்தில் எதிர்பார்க்கும் கூடுதல் இலாபத்தைக் கணக்கிட்டு உருவாக்கப்படும் தற்போதைய மதிப்பு ஆகும்.
- ❖ இது கடந்த காலங்களில் கூட்டாளிகளின் ஓட்டு மொத்த முயற்சிகளின் பலன் ஆகும்

**4. நற்பெயர் - பொருள் மற்றும் தன்மையை விளக்குக.**

i) நற்பெயர் என்பது நிறுவனம் வாடிக்கையாளர்களுக்குச் செய்துள்ள சிறந்த சேவை மற்றும் பொருள்களின் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஈட்டியுள்ள மதிப்பின் அளவீடு ஆகும்.

ii) இது தொழில் நிறுவனத்திற்குச் சாதகமான அம்சங்களின் மதிப்பீடு ஆகும்.

iii) கடந்த காலத்தில் மதிப்போடு இருந்தது என்பதைக் காட்டிலும் வருங்காலத்திலும் அது தொடர்ந்து நீடிக்கும் என்பதில் தான் நற்பெயர் என்ற சொத்தின் மதிப்பு அடங்கியிருக்கிறது.

iv) நற்பெயரைக் கண்ணாலோ, தொட்டோ பார்க்க இயலாது.

v) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து. ஆனால் கற்பனைச் சொத்து அல்ல.

**5. நற்பெயரை மதிப்பிடும் / கணக்கிடும் முறைகள் யாவை ?**

நிறுவனத்தின் நற்பெயரை மூன்று முறைகளில் மதிப்பிடலாம். அவை,

1) சராசரி இலாப முறை
2) உயர் இலாப முறை
3) மூலதனமாக்க முறை.

**6. சராசரி இலாபம் என்பது என்ன?**

- கடந்த ஆண்டுகளில் ஈட்டிய இலாபங்களைக் கூட்டி, அதனை ஆண்டுகளின் எண்ணிக்கையால் வகுக்கப்படும் போது கிடைப்பது சராசரி இலாபம் ஆகும்.
- சராசரி இலாபத்தைக் கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்கினால் நற்பெயரின் மதிப்புக் கிடைக்கும்.
- சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

**7. உயர் இலாபம் என்றால் என்ன?**

- சாதாரண இலாபத்தைவிட கூடுதலாகப் பெறக்கூடிய சராசரி இலாபமே உயர் இலாபம் எனப்படுகிறது.
- உயர் இலாப முறையில், உயர் இலாபத்தை கொள்முதல் ஆண்டுகளால் பெருக்கினால் நற்பெயரைக் கணக்கிடலாம்.

**8. கூட்டாண்மையின் சிறப்பியல்புகள் யாவை? ( ஏதேனும் 5 )**

1. <u>இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கொண்ட குழுமம்</u> :

கூட்டாண்மையை உருவாக்க குறைந்தபட்சம் இரண்டு நபர்கள் இருக்க வேண்டும். அதிக பட்சமாக வங்கித் தொழிலாக இருந்தால் 10 நபர்களும், மற்ற தொழிலாக இருந்தால் 20 நபர்களும் இருத்தல் வேண்டும்.

2. <u>கூட்டாளிகளிடையே உடன்பாடு</u> :

கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டின் காரணமாகவே அவர்களிடையே உறவு ஏற்படுத்தப்படுகிறது.

3. <u>இலாபப் பங்கேற்பு</u> :

கூட்டாண்மை உடன்பாடு கூட்டாளிகள் தொழிலின் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்கிறது.

4. <u>சட்டப்படியான தொழில்</u> :

கூட்டாண்மை உடன்பாடு சட்டப்படியான தொழில் புரிந்து இலாபம் ஈட்டுவதாக இருத்தல் வேண்டும்.

5. <u>அனைவருமோ அல்லது அனைவரின் சார்பில் அவர்களில் எவரோ தொழிலை மேலாண்மை செய்தல்</u> :

கூட்டாண்மை நிறுவனத்தை அனைவரும் நடத்த வேண்டும். ஆனால்,

நடைமுறையில் ஒருவர் மட்டுமோ அல்லது ஒருசில கூட்டாளிகள் மட்டுமோ தொழிலை மேலாண்மை செய்யலாம். கூட்டாண்மையின் மிக முக்கியமான சிறப்பியல்பு, பரஸ்பர மற்றும் உட்கிடை முகமை ஆகும்.

### 9. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல்முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| 1. முதல் தொகையில் மாற்றம் | முதல் தொகை சில சூழ்நிலைகள் தவிர பொதுவாக மாறாமல் அதே தொகையாக இருக்கும். | முதல் தொகை ஆண்டுக்கு, ஆண்டு மாறுபடுகிறது. |
| 2. கணக்குகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கூட்டாளி பெயரிலும் இரண்டு கணக்குகள் அதாவது முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு தொடங்கப்படும் | ஒவ்வொரு கூட்டாளி பெயரிலும் ஒரே ஒரு கணக்கு அதாவது முதல் கணக்கு மட்டும் தொடங்கப்படும் |
| 3. இருப்பு | முதல் கணக்கு எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும். நடப்புக் கணக்குகள் வரவு இருப்பு மற்றும் சில நேரங்களில் பற்று இருப்பு காட்டும் | முதல் கணக்குகள் எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும் |
| 4. சரிக்கட்டுதல்கள் | கூட்டாளிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் பதியப்படும் | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் பதிவு செய்யப்படும் |

### 10. நற்பெயர் மதிப்பை பாதிக்கும் காரணிகள் யாவை? ( ஏதேனும் 5 )

நற்பெயர் நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறனை அடிப்படையாகக் கொண்டது. எனவே நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு கீழ்க்கண்ட காரணிகளால் பாதிக்கப்படுகிறது.

1. <u>தரம்</u> :

   நிறுவனத்தின் பொருள்கள் தரமாக இருப்பதனால் ஏற்பட்டுள்ள நன்மதிப்பு காரணமாக பொருள்கள் உடனடியாக விற்பனை ஆகின்றன. எனவே நற்பெயர் மதிப்பு உயர்கிறது.

2. <u>இடம்</u> :

   நிறுவனம் அமைந்துள்ள இடம் முக்கியமான இடமாக இருந்தாலே, மதிப்பு கூடும்.

3. <u>சிறந்த மேலாண்மை</u> :

   நிறுவனம் சிறப்புடன் மேலாண்மை செய்யப்படுவதன் மூலம் அதிக இலாபம் ஈட்டப் படுவதால் நிறுவனத்தின் மதிப்பு உயர்வடைகிறது.

4. <u>போட்டி</u> :

   போட்டி இல்லாமலோ அல்லது போட்டி குறைவாகவோ இருந்தாலே நிறுவனத்தின் மதிப்பு கூடுகிறது.

5. <u>புனைஉரிமையின் நன்மைகள்</u> :

   வணிகக்குறி, புனைஉரிமை அல்லது பதிப்புரிமை ஆகியவை பெற்றிருந்தால் நிறுவனத்தின் மதிப்பு உயர்வடைகிறது.

6. **காலம் :**

நிறுவனம் தொடர்ந்து பல ஆண்டுகள் இலாபம் ஈட்டுவதால் நன்மதிப்பு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

7. **வாடிக்கையாளர்களின் மனப்பாங்கு :**

ஒரு நிறுவனம் பெற்றுள்ள வாடிக்கையாளர்களின் மனப்பாங்கும் முக்கியமானதாகும். அதிக வாடிக்கையாளர்களைப் பெற்றிருத்தலும் நிறுவனத்தின் நற்பெயரை உயர்த்துகிறது.

8. **தொழிலின் தன்மை :**

நிறுவனத்தின் நிலைத்த தேவையினால் அதிக இலாபம் ஈட்டப்படுகிறது. அதனால் நற்பெயர் அதிகரிக்கிறது.

# அத்தியாயம் - 7 கூட்டாண்மைக் கணக்குகள் - சேர்ப்பு

1. **கூட்டாளிச் சேர்ப்பு என்றால் என்ன?**
   - ஒரு கூட்டாண்மை நிறுவனம், நிதிவளத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், நிர்வாகத்திறனை அதிகப்படுத்திக் கொள்வதற்காகவும் ஒரு புதிய கூட்டாளியைச் சேர்ப்பதையே கூட்டாளிச் சேர்ப்பு எனப்படும்.
   - ஒரு கூட்டாளியைச் சேர்ப்பது, நிறுவனத்தை மாற்றியமைக்கும் வழிகளில் ஒன்று ஆகும்.

2. **உள்வரு கூட்டாளி என்பவர் யார்?**
   - நிறுவனத்தில் சேர்க்கப்படும் நபர் உள்வரும் கூட்டாளி அல்லது புதிய கூட்டாளி என்று அழைக்கப்படுகிறார்.
   - ஒரு புதிய கூட்டாளியைச் சேர்க்கும் பொழுது, தற்போதைய கூட்டாண்மை முடிவுக்கு வந்து புதிய கூட்டாண்மை உருவாகிறது.

3. **கூட்டாளி சேர்ப்பின் பொழுது செய்யப்படும் சரிக்கட்டுதல்கள் யாவை?**
   1. புதிய கூட்டாளியின் முதல் தொகையைப் பதிவு செய்தல்.
   2. புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதத்தைக் கணக்கிடுதல்.
   3. சொத்துகள், பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல்.
   4. பகிர்ந்துதரா இலாப நட்டத்தை மாற்றுதல்
   5. குவிந்த காப்புகளை மாற்றுதல்
   6. நற்பெயர் குறித்து ஆவன செய்தல்

4. **தியாக விகிதம் என்றால் என்ன?**

பழைய கூட்டாளிகள், புதிய கூட்டாளிக்கு அவர்கள் இலாபத்தின் ஒரு பகுதியினை வழங்க ஒப்புக் கொண்ட விகிதமே தியாக விகிதம் எனப்படும்.

| |
|---|
| **தியாக விகிதம் = பழைய இலாபப் பகிர்வு விகிதம் - புதிய இலாபப் பகிர்வு விகிதம்** |

5. மறுமதிப்பீட்டுக் கணக்கு என்றால் என்ன ?

- மறுமதிப்பீடு என்பது கூட்டாண்மை நிறுவனம் மாற்றியமைக்கப்படும் பொழுது, அதன் சொத்துகளையும், பொறுப்புகளையும் மதிப்பீடு செய்வதாகும்.
- ஒரு கூட்டாளியைச் சேர்க்கும்பொழுது, சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்து, அதன்மூலம் கிடைக்கும் இலாப, நட்டத்தை பழைய இலாபப் பகிர்வு விகிதத்தில் சரிக்கட்டப்பட வேண்டும்.
- இதனால் புதிய கூட்டாளிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

6. புதிய கூட்டாளியைச் சேர்க்கும்பொழுது பகிர்ந்து தரா இலாப நட்டங்களை என்ன செய்வாய் ?

- சில நேரங்களில், நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புக்கள் பக்கத்தில இலாப நட்டக் கணக்கு என்ற பெயரில் பகிர்ந்து தரா இலாபமும், சொத்துக்கள் பக்கத்தில் இலாப நட்டக் கணக்கு என்ற பெயரில் பகிர்ந்து தரா நட்டமும் காட்டப்படுகின்றன.
- பகிர்ந்து தரா இலாப நட்டத்தில் புதிய கூட்டாளிக்கு எந்தவித பங்கும் கிடையாது.
- எனவே, பகிர்ந்துதரா இலாபம் அல்லது பகிர்ந்துதரா நட்டம் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளுக்கு பழைய இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றப்பட வேண்டும்.

7. குவிந்த காப்பு என்றால் என்ன ?

- சில நேரங்களில், நிறுவனத்தின் கூட்டாளிகள், இலாபத்தின் ஒரு பகுதி அல்லது சதவீதத்தினை வருங்காலத்தில் எதிர்பாராமல் ஏற்படும் நட்டங்கள் மற்றும் இழப்புகளைச் சரிகட்ட ஒதுக்கீடு செய்கின்றனர்.
- இவை காப்பு, பொதுக்காப்பு, காப்புநிதி, நிகழ்வடையா காப்பு போன்ற பெயரில் உருவாக்கப்படுகின்றன.

8. நற்பெயரின் மறுமதிப்பீட்டு முறை என்பது என்ன?

- நற்பெயர் என்பது பழைய கூட்டாளிகளின் கடந்த கால முயற்சிகளின் பலன் ஆகும்.
- எனவே, புதிய கூட்டாளியைச் சேர்க்கும் பொழுது நற்பெயரின் அப்பொழுதைய மதிப்பினை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் சரிக்கட்டுதல் செய்ய வேண்டும்.
- மறுமதிப்பீட்டு முறையில், புதிய கூட்டாளி அவருடைய நற்பெயர் பங்காக ரொக்கம் கொண்டு வருவதில்லை

9. நற்பெயர் - எந்த முறையைப் பின்பற்றி சரிக்கட்டுதல் செய்ய வேண்டும்?

1. மறுமதிப்பீட்டு முறை
2. நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு முறை
3. முனைமம் முறை